செ. கு. எண்: 263 நாள் :04.10.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.10.2013

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி திரு. முருகன் என்பவர் 25.9.2013 அன்று பண்ருட்டி காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் விசாரணை முடிந்து வீடு திரும்பியவர் பண்ருட்டி பேருந்து நிலையம் அருகே உயிரிழந்துள்ளார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. முருகன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மாற்றுத் திறனாளி திரு. முருகன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த சம்பவம் தொடர்பாக சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினருக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9